# விஜயபாரதம்

மின்னணு தின இதழ் (தனிச்சுற்று) VIJAYABHARATHAM DAILY

பிலவ, ஆனி - 25 வெள்ளி 09.07.2021 மலர் - 2, இதழ் - 94


## தவறிழைக்கும் அறநிலையத்துறை

ஸ்ரீரங்கம், ரெங்கநாதர் கோயிலின் கோசாலைக்கு, பக்தர்களால் காணிக்கையாக வழங்கப்பட்ட பசுக்களை கோயில் அர்ச்சகர்கள், பூசாரிகள் உள்ளிட்டோருக்கு பசுக்களை இலவசமாக வழங்கப்பட்டது. இது பெரும் சர்ச்சையை கிளப்பியுள்ளது. கடந்த 4ம் தேதி ஸ்ரீரங்கம் கோயில் இணை ஆணையர் மாரிமுத்துவும், ஸ்ரீரங்கம் எம்.எல்.ஏ பழனியாண்டியும், ஒரு விழாவில் இப்படி 45 பசுக்களை வழங்கியுள்ளனர். இது இங்கு மட்டுமல்ல, பல பெரிய கோயில்களும் தங்கள் கோசாலையில் உள்ள பசுக்களை, பல ஆண்டுகளாக இப்படி இலவசமாக கொடுப்பதாகத் தெரியவந்துள்ளது. கடந்த 2012ல் மட்டும், திருச்செந்துார் முருகன் கோவிலில், 6,000 பசுக்கள் இப்படி கொடுக்கப்பட்டுள்ளன. கோயிலுக்கு தானமாக வழங்கப்பட்ட நிலங்களை, சொத்துக்களை ஹிந்து அறநிலையத்துறை எப்படி பத்திரமாக பாதுகாக்க வேண்டுமோ அதேபோல கோயிலுக்கு வழங்கப்பட்ட, யானை, பசுக்கள் உள்ளிட்ட அனைத்து கால்நடைகளையும் பாதுகாக்க வேண்டியது அவசியம். இந்நிலையில், இது குறித்து பேசிய ஸ்ரீரங்கம் ரங்கராஜன் நரசிம்மன், 'உபரியாக உள்ள பசுக்கள் மட்டுமே கொடுக்கப்பட்டதாக, அறிவிப்புப் பலகை சொல்கிறது. ஆனால், கோசாலையில் எத்தனை பசுக்களை வைத்துப் பராமரிக்க அனுமதிக்கப்பட்டுள்ளது, அறநிலையத் துறையின் எந்த விதியின் கீழ், இப்படி கோசாலைக்கு வந்த பசுக்களை இலவசமாக கொடுக்கின்றனர், இதற்கான அனுமதியை, எந்த அறநிலையத் துறைச் சட்ட விதி வழங்குகிறது என்ற எந்த விபரமும் தெரியவில்லை. இவை அனைத்தும் அடிமாடுகளாக விற்பனை செய்யப்படுமே அன்றி, பேணிப் பாதுகாக்கப்படுவதற்கான ஆதாரம் ஏது?' என கேள்வி எழுப்பியுள்ளார்.

விஜயபாரதம்



# நிதியமைச்சருக்கு ஹெச்.ராஜா கேள்வி

சிங்கம்புணரியில் பேசிய பா.ஜ.க தலைவர் ஹெச். ராஜா, 'பெட்ரோல், டீசலை ஜி.எஸ்.டி.,யில் கொண்டு வர மத்திய அரசாங்கம் ரெடி. ஆனால் மாநில அரசு ரெடியா என்பதை தமிழக நிதியமைச்சர் தியாகராஜன் தெரிவிக்க வேண்டும் என பேசினார். மேலும், திரையுலகில் தேசத்திற்கு எதிராகவும், தேச விரோதமாகவும் பேசுவதை கருத்துரிமையாக நினைப்பவர்கள் மட்டும்தான், இச்சட்டத்துக்கு எதிர்ப்பு தெரிவிக்கின்றனர். பிரதமர் மோடி தலைமையிலான ஆட்சி இல்லை என்றால், பாரதத்தில் கொரோனாவால் ஒரு கோடி பேருக்கு மேல் இறந்திருப்பார்கள். மத்திய அரசு தடுப்பூசி விஷயத்தில் எந்த மாநிலத்துக்கும் எவ்வகையிலும் பாரபட்சம் காட்டுவதில்லை. தமிழக நிதியமைச்சருக்கு பொருளாதாரம் தெரியவில்லை. திராவிட இயக்கங்கள், மக்களை சுரண்டி தமிழகத்தை கடன் வலையில் சிக்க வைத்துள்ளன. தமிழகம் மாற்றத்தை நோக்கி திரும்ப வேண்டிய அவசியம் உள்ளது' என தெரிவித்தார்.




விஜயபாரதம்

# ரூ. 11 கோடி அரசு நிலம் மீட்பு

பல்லாவரம் தாலுகா, பரங்கிமலை கிராமம், பட்ரோடு சந்திப்பில் உள்ள 35 சென்ட் அரசு நிலம், நீண்ட நாள் அடிப்படையில் குத்தகைக்கு விடப்பட்டது. குத்தகை ஒப்பந்தம் முடிந்தும் பலரது கை மாறிவந்தது. இதனால், அரசுக்கு இழப்பு ஏற்பட்டது. இதையடுத்து, இடத்தை மீட்க வருவாய்த்துறை அதிகாரிகள் அங்கு நேரில் சென்று 11 கோடி ரூபாய் மதிப்புள்ள அந்த இடத்தை மீட்டனர். அதில் கட்டப்பட்டிருந்த கட்டடம் இடிக்கப்பட்டது. அந்த இடத்தை, அரசு திட்டங்களுக்கு பயன்படுத்த தற்போது முடிவு செய்யப்பட்டு உள்ளது.

விஜயபாரதம்



# கோயில் நிலம் ஒப்படைப்பு



விஜயபாரதம்

திருப்பூர் மாவட்டம் பொங்கலூர் அடுத்த கண்டியன்கோவில் கிராமம், முதியாநெரிசலில் கண்டீஸ்வரர் கோயிலின் நிலம் 6.40 ஏக்கர் உள்ளது. இதன் மதிப்பு 2 கோடி ரூபாய். அதனை அதே பகுதியைச் சேர்ந்த ஐந்து பேர் பயன்படுத்தி வந்தனர். ஹிந்து சமய அறநிலையத்துறையினரிடம் நிலத்தை மீண்டும் கோயிலுக்கே ஒப்படைக்கிறோம் என அதனை பயன்படுத்தி வந்தவர்கள் எழுதிக் கொடுத்தனர். இதையடுத்து, 'இந்த நிலம் கண்டீஸ்வரர் கோயிலுக்குச் சொந்தமான நிலம்' என, அறிவிப்பு பலகை அங்கு வைக்கப்பட்டது.

# லியோனி குறித்து அன்புமணி

தமிழ்நாடு பாடநூல் நிறுவனத்தின் தலைவராக திண்டுக்கல் லியோனி நியமனம் செய்யப்பட்டதற்கு பல்வேறு தரப்புகளில் இருந்தும் கடும் கண்டனங்கள் எழுந்துள்ளன. இந்நிலையில், பா.ம.க தலைவர் அன்புமணி ராமதாஸ் வெளியிட்டுள்ள டுவிட்டர் பதிவில், 'தமிழ்நாடு பாடநூல் நிறுவனம் மற்றும் கல்வியியல் பணிகள் கழகத்தின் தலைவராக திண்டுக்கல் ஐ.லியோனி நியமிக்கப்பட்டிருக்கிறார். பெண்களை இழிவுப்படுத்தி பேசுவதையே பிழைப்பாகக் கொண்ட ஒருவரை இந்த பதவியில் அமர்த்துவதை விட, அப்பதவியை மோசமாக அவமதிக்க முடியாது! பெண்களின் இடுப்பு, மடிப்பு பற்றி பேசுபவருக்கு படிப்பு பற்றி என்ன தெரியும்? பாடநூல் நிறுவனத்தின் பணி அறிவை வளர்க்கும் பாடநூல்களை தயாரிப்பதாகும். லியோனி தலைமையில் தயாரிக்கப்படும் பாடநூல்களை படிக்கும் மாணவர்களின் கதி என்னவாகும்? திண்டுக்கல் லியோனி சிறந்த ஆசிரியராம். அவரது கடந்த கால பேச்சுகளைக் கேட்டவர்கள் எவரும் இதை நம்ப மாட்டார்கள். பாடநூல் நிறுவனத் தலைவர் என்ற புனிதமான பதவியிலிருந்து லியோனியை நீக்கி விட்டு, தகுதியான கல்வியாளர் ஒருவரை அரசு அமர்த்த வேண்டும்' என கூறியுள்ளார்.

விஜயபாரதம்



# கோயில் நில ஆக்கிரமிப்பு நீதிமன்றம் உத்தரவு

சேலம், தாராமங்கலத்தில் உள்ள இளமீஸ்வரர் கோயில் நிலத்தில் அனுமதியில்லாமல் கட்டடங்கள் கட்டப்படுவதை தடுத்து, ஆக்கிரமிப்பை அகற்ற கோரி, சேலத்தைச் சேர்ந்த ஏ. ராதாகிருஷ்ணன் என்பவர் சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தார். இது குறித்து அளிக்கப்பட்ட புகாரில், கோயில் நிர்வாகம், தாசில்தார் யாரும் சரிவர எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என கூறப்படுகிறது. இந்நிலையில், இம்மனுவை விசாரித்த நீதிபதிகள் அமர்வு, மனுதாரரின் மனு மீது, கடந்த 5 ஆண்டுகளாக நடவடிக்கை எடுக்கப்படாதது குறித்து, மாவட்ட ஆட்சியர் காணொலி காட்சி மூலம் ஆஜராகி விளக்கமளிக்க உத்தரவிட்டு, விசாரணையை வரும் 22ம் தேதிக்குத் தள்ளிவைத்தனர்.

விஜயபாரதம்



# வி.பி.துரைசாமி கேள்வி

தமிழக பா.ஜ.க துணை தலைவர் வி.பி.துரைசாமி வெளியிட்டுள்ள அறிக்கையில், 'தமிழகத்தில், சில நாட்களாக ஆளுங்கட்சியை விமர்சனம் செய்பவர்கள் குண்டர் சட்டத்தில் கைது செய்யப்பட்டு வருகின்றனர். அவதுாறு செய்திகளை பதிவிட்ட 16 நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். அவதுாறு கருத்துகளை பதிவிட்ட நபர்கள் மீது 75 வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன என, தமிழக டி.ஜி.பி கூறியுள்ளார். தேர்தல் நேரத்தில் தி.மு.க அளித்த தேர்தல் வாக்குறுதிகளை நம்பித்தான் மக்கள் ஓட்டு போட்டனர். அதனை தற்போது நிறைவேற்ற முன்வராத அரசை கேள்வி கேட்ட தொழில்நுட்ப பிரிவினர்கள் மீது, வழக்கு பதிவு செய்வது அடக்குமுறை. தமிழக நிதி அமைச்சரின் தவறான பேச்சை சுட்டி காட்டியவர்களை கைது செய்கின்றனர். மேலும், தி.மு.க., அமைப்பு செயலர் ஆர்.எஸ்.பராதி, 'அவதுாறு பரப்பினால் சட்டம், ஒழுங்கு கெட்டு விடும்; எதற்கும் ஓர் எல்லை உண்டு' என்று மிரட்டும் வகையில் கருத்து கூறுகிறார். குண்டர் சட்டத்தில் கைது செய்வதற்கென்று சட்டத்தில் சில இலக்கணங்கள் வகுக்கப்பட்டு உள்ளன. இயற்கை நியதியை காவல் துறை மீறக் கூடாது' என தெரிவித்துள்ளார்.



விஜயபாரதம்

# அங்கன்வாடியில் தரமற்ற முட்டைகள்


விஜயபாரதம்

ராமநாதபுரம், கடலாடி அருகே ஆய்க்குடி அங்கன்வாடி மையத்தில் 20 குழந்தைகள் பயின்று வருகின்றனர். கொரோனா ஊரடங்கு காரணமாக மாணவர்களுக்கு வழங்கப்படும், அரிசி, பருப்பு மற்றும் முட்டைகள் ஆகியவை குழந்தைகளின் வீடுகளுக்கே நேரடியாகச் சென்று வழங்கப்பட்டு வருகிறது. அதன்படி, அங்கன்வாடி ஊழியர்களால் குழந்தைகளுக்கு வழங்கப்பட்ட முட்டைகளில் பல அழுகியும், குஞ்சுகள் உருவான நிலையிலும் இருந்தன. இதனையடுத்து, அங்கன்வாடி பொறுப்பாளரிடம், பெற்றோர்கள் புகார் அளித்தனர். நல்ல தரமான முட்டைகளை வழங்க மாவட்ட நிர்வாகம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கோரிக்கை விடுத்தனர்.

# இவரா மீன்வளத் துறை அமைச்சர்

தமிழக மீன்வளத்துறை அமைச்சர் அனிதா ராதாகிருஷ்ணன், பழவேற்காட்டில் ஆய்வு ஒன்றிற்காக சென்றிருந்தார். அப்போது, அவர் தண்ணீர் கால் வைக்க தயங்கியதால், மீனவர் ஒருவர் அமைச்சரை தூக்கி சென்று உள்ளார். தண்ணீரில் கால் வைக்கவே தயங்கும் இவரா நமது மீன்வளத்துறை அமைச்சர்? இவர் எப்படி நம் மீனவர்களின் உணர்வுகளை புரிந்து கொள்வார்? என நெட்டிசன்கள் அமைச்சரை கிண்டல் அடித்து வருகின்றனர்.


விஜயபாரதம்

# த.மு.மு.க.வினர் கைது



விஜயபாரதம்

பெட்ரோல், டீசல், சிலிண்டர் விலை உயர்வை கண்டித்து, த.மு.மு.க., சார்பில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. அதில், ஹிந்து மதத்தை இழிவுபடுத்தும் வகையில், மனநலம் பாதித்த சிறுவன் ஒருவனின் உடலில் நாமம் வரைந்து போராட்டத்தில் முன்னிறுத்தி த.மு.முகவினர் போராட்டத்தில் ஈடுபட்டனர். ஹிந்து மதத்தினரை புண்படுத்தும் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க ஹிந்து முன்னணியினர் கோரிக்கை வைத்தனர். இதையடுத்து, த.மு.மு.க., நிர்வாகிகள் அப்துல் ஹக்கீம், முஜ்பூர் ரஹ்மான், முகமது பரோஸ் மற்றும் பொன்னுச்சாமி ஆகியோர் கைது செய்யப்பட்டனர்.

# பயங்கரவாதிகளிடம் இத்தாலி துப்பாக்கி



விஜயபாரதம்

கன்னியாகுமரி, களியக்காவிளையில், கடந்த 2020, ஜனவரியில், சிறப்பு எஸ்.ஐ., வில்சனை சில மர்ம நபர்கள் கொடூரமாக துப்பாக்கியால் சுட்டுக் கொன்றனர். இது தொடர்பாக, தௌபீக், அப்துல் ஷமீம், உள்ளிட்ட 7 பயங்கரவாதிகளை கைது செய்து, சிறையில் அடைத்துள்ளனர். இவ்வழக்கை தேசிய புலனாய்வு நிறுவன அதிகாரிகள் விசாரித்தனர். அவர்கள், இதன் தலைவனான ஐ.எஸ்.ஐ.எஸ் பயங்கரவாதி காஜா மொய்தீனை டில்லியில் கைது செய்தனர். விசாரனையில், காஜா மொய்தீன்தான் வில்சனை கொலை செய்ய பயன்படுத்திய, இத்தாலி நாட்டு 7.65 பிஸ்டல் துப்பாக்கியை வாங்கினான். அவனுக்கு மும்பையில்உள்ள இஜாஸ் பாட்ஷா என்பவன் உதவி உள்ளான் என தெரியவந்தது. மேலும், இதன் பின்னணி, சம்பந்தப்பட்ட முக்கியப் புள்ளிகள் குறித்த விசாரணை நடைபெற்று வருகிறது.


# வங்க தேசத்தினர் கைது



விஜயபாரதம்

வடிகால் குழாய் வழியாக பாரதத்திற்குள் சட்டவிரோதமாக நுழைந்த முகமது ஹாசன், அவரது சகோதரர் ஹைதர் அலி உள்ளிட்ட 8 பேரை இந்திய ரயில்வே காவல்துறையினர் கைது செய்து விசாரித்து வருகின்றனர்.

# சிக்க வைக்கப்பட்ட நம்பி நாராயணன்



விஜயபாரதம்

முன்னாள் இஸ்ரோ விஞ்ஞானி நம்பி நாராயணனை பொய் வழக்குப் போட்டு கைது செய்த இரண்டு முன்னாள் கேரள காவல்துறை அதிகாரிகளின் ஜாமீன் மனுவை எதிர்த்து கேரள உயர் நீதிமன்றத்தில் சி.பி.ஐ மனுத் தாக்கல் செய்தது. அப்போது, நம்பி நாராயணனை அவர்கள் வழக்கில் பொய்யாக சிக்கவைத்ததாக சி.பி.ஐ குற்றம் சாட்டியது. மேலும், கிரையோஜெனிக் தொழில்நுட்ப விவகாரத்தில் நம்பி நாராயணன் வேண்டுமென்றே தாமதப்படுத்தியதாக கூறப்பட்டதும் தவறு, அது சித்தரிக்கப்பட்ட பொய் என சி.பி.ஐ தெரிவித்துள்ளது.

# ரேஷன் பொருட்களை திருடும் கட்சியினர்



விஜயபாரதம்

டெல்லியில், ஏழைகளுக்கு வழங்குவதற்காக, ரேஷன் பொருட்கள் டெல்லி, அசோக் நகரில் உள்ள அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் சேமிக்கப்பட்டு வைக்கப்பட்டது. ஆம் ஆத்மி கட்சியினர் சிலர், அந்த பள்ளி ஊழியர்களின் துணையோடு அங்கிருந்த ரேஷன் பொருட்களைத் திருடி, வெளி மார்க்கெட்டில் விற்று வந்தனர். இதனை அப்பகுதி பா.ஜ.கவினர் கையும் களவுமாக பிடித்தனர். அவர்கள் ஏற்கனவே இப்படி பலமுறை திருடியுள்ளனர். அரிசி, கோதுமை அடங்கிய 516 உணவு பொருட்கள் தொகுப்பு ஏற்கனவே திருடப்பட்டிருந்தன, ஆம் ஆத்மி கட்சியினரின் வீட்டில் இருந்து மீட்கப்பட்ட ரேஷன் பொருட்கள் பள்ளிக்கு திருப்பி அனுப்பப்பட்டுள்ளது. இதற்கான அனைத்து வீடியோ ஆதாரங்களும் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அவர்கள் மீது கெஜ்ரிவாலின் ஆம் ஆத்மி கட்சியி நடவடிக்கை எடுக்கக் கோரி, அம்மாநில பா.ஜ.கவினர் போராட்டம் நடத்தினர்.

# தடுக்கப்படவேண்டிய பசுக் கடத்தல்

அசாமில் முதல்முறையாக காவல் நிலையப் பொறுப்பு அதிகாரிகளின் மாநாட்டில் உரையாற்றிய அசாம் முதல்வர் டாக்டர் ஹிமந்தா பிஸ்வா சர்மா, பசுமாடு நமக்கு புனிதமான விலங்கு. அதை நாம் அனைத்து வகையிலும் பாதுகாக்க வேண்டும். அசாமில் பசுக் கடத்தல் பல ஆண்டுகளாக நடந்து வரும் 1,000 கோடி ரூபாய் சட்டவிரோத வர்த்தகம். இதில், பல சர்வதேச சக்திகள் ஈடுபட்டுள்ளனர். அசாமில் இருந்து ஏராளமான கால்நடைகள் சட்டவிரோதமாக பங்களாதேஷுக்கு கடத்தப்படுகின்றன. இதற்கு முடிவு கட்டப்பட வேண்டும். இதுவரை நூற்றுக்கணக்கான கடத்தல்காரர்களை கைது செய்துள்ளனர். அதில் பெரும்பாலானவர்கள் புலம்பெயர்ந்த முஸ்லிம்கள். இதில் ஈடுபட்ட ஒரு காவல்துறை டி.எஸ். பியும் கைது செய்யப்பட்டுள்ளார். மேலும், அடுத்த ஆறு மாதங்களுக்குள் நிலுவையில் உள்ள வழக்குகளை தீர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டும். கற்பழிப்பு, போதைப்பொருள், ஆயுதங்கள் தொடர்பான வழக்குகளில் கணிசமான ஆதாரங்களை அடிப்படையாகக் கொண்ட குற்றப்பத்திரிகைகள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட வேண்டும். குற்றவாளிகள் தண்டிக்கப்பட வேண்டும்" என்றும் முதல்வர் கூறினார்.



விஜயபாரதம்

# ஊடக கயமைத்தனம்




விஜயபாரதம்

உத்தரபிரதேசம்: அம்ரோஹாவில் அப்சல் மாலிக் என்ற முஸ்லிம் மந்திரவாதியும் மற்றும் அவரது உதவியாளர்கள் தாரிக், சுல்பிகர் ஆகியோரும் இணைந்து ஒரு சிறுமியின் நோயை போக்குவதாகக் கூறி பாலியல் பலாத்காரம் செய்தனர். காவல்நிலையத்தில் புகார் அளிக்கக் கூடாது என்றும் அந்த குடும்பத்தை மிரட்டியுள்ளனர். இந்த விவகாரம் குறித்து செய்தி வெளியிட்ட டைம்ஸ் நவ் செய்தி ஊடகம், இவ்வழக்கில் குற்றம் சாட்டப்பட்டவர்களை 'தாந்திரீகர்கள்' என ஏதோ ஹிந்து சாமியார்கள் போல சித்தரித்து தங்களின் நடுநிலைத்தன்மையை பறைசாற்றிக்கொண்டது. டைம்ஸ் நவ் இப்படி செய்தி வெளியிடுவது முதல்முறை அல்ல. கடந்த 2018ல்கூட ஆசிப் நூரி என்ற குற்றவாளி குறித்து செய்தியில், ஒரு ஹிந்து சாதுவின் ஓவியத்தை வெளியிட்டது. இது போன்ற ஊடகங்கள் பொதுவாக, கிறிஸ்தவ, முஸ்லிம் சமூகத்தை சேர்ந்த பாதிரிகள், மத பிரச்சாரகர்கள், கற்பழிப்பு உள்ளிட்ட குற்றங்களில் ஈடுபட்ட செய்திகளை வெளியிடாது அல்லது அவர்களை ஹிந்துக்கள் போல காட்டி செய்தியின் தன்மையை திசை திருப்பிவிடும் பணியையே பல காலமாக செய்து வருகின்றன.

# பட்டியலினத்தவரை தாக்கிய முஸ்லிம்கள்



விஜயபாரதம்

ராஜஸ்தான், ஜலாவரைச் சேர்ந்த கிருஷ்ணா வால்மீகி என்ற பட்டியலின இளைஞனை, சாகர் குரேஷி, ரெய்ஸ், இம்ரான், அக்தர் அலி, சோஹைல், சாஹித் உள்ளிட்ட 12 முஸ்லிம்கள் இணைந்து மரக்கட்டைகளால் தாக்கிக் கொன்றனர். அவர் காரில் இருந்து இழுக்கப்பட்டு கொடூரமாக தாக்கப்படும் வீடியோ சமூக ஊடகங்களில் பரபரப்பாக பகிரப்பட்டுள்ளது. இது குறித்து காவல்துறையினர் கூறுகையில், இதில் ஈடுபட்டவர்கள் அனைவரும் கைது செய்யப்பட்டுள்ளனர். இதற்கு முன்பகை, பழிவாங்கல் நடவடிக்கை மட்டுமே காரணம். மேலும் அசம்பாவிதம் ஏற்படாமல் தடுக்க முன்னெச்சரிக்கை நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என தெரிவித்துள்ளது.

# ஐ.ஐ.எம்.பி.யில் ஷைலஜா உரை

கேரள முன்னாள் சுகாதாரத்துறை அமைச்சர் ஷைலஜா டீச்சர், ஐ.ஐ.எம்.பி எனப்படும் இந்தியன் இன்ஸ்டிடியூட் ஆப் மேனேஜ்மென்ட் பெங்களூருவில் வரும் ஜூலை 10 அன்று 'கோவிட் 19 தொற்றுநோயை நிர்வகித்தல், கொள்கை தாக்கங்களில் அதன் விளைவுகள்' என்ற தலைப்பில் ஒரு சொற்பொழிவை நடத்துகிறார்.

கொரோனாவை கட்டுப்படுத்துவதில் அவர் சிறந்து விளங்கியதாக, இடதுசாரிவாதிகள், லிபரல்கள் என சிலர் அவரை புகழ்ந்தனர். பாரதத்திற்கு எதிரான கருத்தை கொண்ட ஜார்ஜ் சோரஸ் தலைமையிலான கல்லூரியும் பத்திரிகையும் அவருக்கு 'Top Thinker of the Year 2020' என்ற விருதை வழங்கியது.

ஆனால், கள நிலவரம் என்னவோ வேறு மாதிரியாகத்தான் இருக்கிறது. கொரோனாவின் முதல் அலை, இரண்டாவது அலையின்போது, மக்கள்தொகை, பரப்பளவு விகிதாச்சார அடிப்படையில், கொரோனா மையமாக கேரளா என்ற சிறிய மாநிலம் திகழ்ந்தது. அதன் தாக்கம் தமிழகம், கர்நாடகாவையும் பாதித்தது. அதிக உயிரிழப்புகள் ஏற்பட்டன. பல கொரோனா மரணங்கள் மூடிமறைக்கப்பட்டது ஆதாரபூர்வமாக நிரூபிக்கப்பட்டது. இரண்டாம் அலையில், ஒரு நாளைக்கு 43,000 வரை கொரோனா தொற்று கண்டறியப்பட்டது. தற்போதுவரை அங்கு கொரோனா பாதிப்பு தோராயமாக 12 ஆயிரமாக உள்ளது. 30 லட்சத்திற்கும் அதிகமானோர் பாதிக்கப்பட்டுள்ளனர். இதனால், அவரை அப்பதவியில் இருந்து முதல்வர் பினராயி விஜயன் நீக்கினார்.

உண்மை நிலை இப்படி இருக்கையில், ஐ.ஐ.எம் பெங்களூரு போன்ற நாட்டின் முதன்மையான கல்வி நிறுவனங்கள்கூட லிபரல்கள், போலி மதச்சார்பற்றவாதிகள், இடதுசாரிகளின் தவறான பிரச்சாரத்திற்கு பலியாகின்றன என்பது வருந்தத்தக்கது.

விஜயபாரதம்





# ஆறும் ஆன்மிகமும்





ஆற்றில் வெள்ளம் கரை புரண்டு ஓடுகிறது. இக்கரையில் இரண்டு பேர் நின்று கொண்டிருக்கிறார்கள். ஓடம் இல்லை. எப்படி அக்கரைக்குப் போவது?

அப்போது ஒரு காளை மாடு அங்கே வந்தது. அதுவும் அக்கரைக்குப் போக வேண்டும். ஆனால் அதற்கு ஓடம் எதுவும் தேவைப்படவில்லை. ஆற்றில் பாய்ந்தது… நீந்த ஆரம்பித்தது.

இதைப் பார்த்த இருவரில் ஒருவன், ஆற்றில் குதித்தான். காளை மாட்டின் வாலை பிடித்துக்கொண்டான். காளை மாடு சுலபமாக அவனை இழுத்துச்சென்று அக்கரையில் சேர்த்துவிட்டது.

அடுத்தவன் பார்த்தான், நமக்கு ஒரு 'வால்' கிடைக்காதா…

இப்போது, ஒரு நாய் வந்து ஆற்றில் குதித்தது. இவனும் ஆற்றில் குதித்து நாயின் வாலைப் பிடித்துக் கொண்டான். அவனை இழுத்துக்கொண்டு நாயால் நீந்த முடியவில்லை. திணறியது. ஒரு கட்டத்தில் நாய், 'வாள்… வாள்' என்று கத்த ஆரம்பித்தது. இருவருமே ஆற்று நீர் போகும் திசையிலேயே போய்க் கொண்டிருக்கிறார்கள். ஆனால், அவர்கள் போக வேண்டிய திசையோ வேறு.

மற்றொரு சம்பவத்தில்,

ஆற்றின் நடுவே கம்பளி மூட்டை ஒன்று மிதந்து செல்கிறது. உள்ளே ஏதாவது பொருள் இருக்கும் என்கிற ஆசையில் ஒருத்தன் நீந்திச் சென்று அதைப் பற்றுகிறான். நீண்ட நேரமாக கரை திரும்பவில்லை. நடு ஆற்றில் போராடுகிறான். கரையில் நின்று கொண்டிருக்கும் அவன் நண்பர்கள் கத்துகிறார்கள்… ''நண்பா… மூட்டையை இழுத்துக் கொண்டு உன்னால் வர முடியவில்லை என்றால் அதை விட்டுவிடு!'' என்று

ஆற்றின் நடுவே இருந்து அவன் அலறுகிறான்: ''நான் இதை எப்பவோ விட்டுவிட்டேன்… இப்போ இதுதான் என்னை விடமாட்டேங்குது, . ஏன்னா, இது கம்பளி மூட்டை இல்லே. கரடிக் குட்டி!''

கரை சேர நினைக்கும் மனிதர்களின் கதை இது. சிலர் கரையிலேயே நின்று விடுகிறார்கள். சிலர் காளையின் வாலைப் பிடித்துக் கொள்கிறார்கள். சிலர் நாயின் வாலைப் பற்றிக் கொள்கிறார்கள். சிலரோ கரடிக் குட்டியை…

ஆன்மிகம் என்ன சொல்கிறது? நீங்கள் கரை சேர விரும்பினால், எதையும் பற்றிக் கொள்ளாதீர்கள். ஏற்கெனவே பற்றிக் கொண்டிருப்பதை விட்டு விடுங்கள்! தவறாகப் பற்றுகிறவர்கள் தடுமாறிப் போகிறார்கள். சரியாகப் பற்றுகிறவர்கள், கரையேறி விடுகிறார்கள். பற்றையே விடுகிறவர்கள், கடவுளாகி விடுகிறார்கள்!

ஜெ. பிரேம குமாரி

# வலையில் சிக்கிய மீன்கள்









# சமூக ஊடகங்கள் மீது டிரம்ப் வழக்கு




விஜயபாரதம்

அமெரிக்காவின் முன்னாள் அதிபர் டொனால்ட் டிரம்ப், கடந்த புதன் அன்று நியூ ஜெர்சி கோல்ஃப் மைதானத்தில் தனது பெட்மின்ஸ்டரில் ஒரு செய்தி மாநாட்டில் உரையாற்றினார். அப்போது, தொழில்நுட்ப நிறுவனங்களான கூகிள், யூடியூப், முகநூல், டுவிட்டர் மற்றும் அவர்களின் தலைமை நிர்வாக அதிகாரிகளுக்கு எதிராக வழக்குத் தொடர்ந்துள்ளதாக தெரிவித்தார். மேலும், சமூக ஊடகங்கள், தற்போது செய்துவரும் நியாயமற்ற நிழல் தடைகளுக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும். சுதந்திரமான பேச்சுரிமையை பாதுகாக்க வேண்டும். இவை, தகவல்தொடர்பு ஒழுக்கச் சட்டத்தின் பிரிவு 230ன் கீழ் அனுபவித்த பாதுகாப்பை துஷ்பிரயோகம் செய்துள்ளன. இந்த வழக்கில், வரலாற்று வெற்றியை நாங்கள் அடைவோம் என தெரிவித்தார். இது குறித்த கேள்விக்கு டுவிட்டர் கருத்து தெரிவிக்க மறுத்துவிட்டது. முகநூலும் கூகுளும்கூட உடனடியாக இதற்கு பதில் அளிக்கவில்லை என ராய்ட்டர்ஸ் செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.


## விஜயபாரதம் தேசிய வார இதழ்

சந்தா செலுத்த / புதுப்பிக்க
www.vijayabharatham.org
என்ற இணையதளம் அல்லது
044 - 26420870 என்ற தொலைபேசி
எண்ணில் தொடர்பு கொள்ளவும் .

93613 99006